1968 ஆகஸ்ட் 28]

எல்லாம் நம்மை விட்டுப் போய்விட்டது. வேறு சிலர் வேண்டுமென்றே இருந்த காட்டுப் பகுதிகளை அழித்துவிட்ட காரணத்தால் நம்முடைய மாநிலத்தில் காடுகள் குறைந்துவிட்டன.

பூந்தமல்லி பத்திரப் பதிவாளர் அலுவலகம்

*170 வின :—**திரு. கே. சகாதேவ கண்டர் :** மாண்புமிகு சட்ட, கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) பூந்தமல்லி சப்-ரிஜிஸ்தரராபீசை சென்னை தலைமை மாவட்ட செயலகத்தோடு இணைக்காமல் காஞ்சிபுரம் தலைமைச் செயலகத்தோடு இணைத்தது பொதுஜனங்களுக்குப் பாதகமாய் உள்ளது என்று அந்த வட்ட பொதுஜனங்களிடமிருந்து மகஜர் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம், எனில், அரசு அதன் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) பூவிருந்தவல்லியில் உள்ள உதவிப் பதிவாளர் அலுவலகத்தை காஞ்சீபுரம் பதிவு மாவட்டத்திலிருந்து, சென்னைப் பதிவு மாவட்டத்திற்கு 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் தேதி முதல் மாற்றுவது குறித்த ஆணைகள், வருவாய்த் துறையின் 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ம் தேதியிட்ட 908-ம் எண் அரசாங்க ஆணையில் வெளியிடப்பட்டுள்ளன.

திரு. கே. சகாதேவ கண்டர் : தலைவர் அவர்களே, பூவிருந்தவல்லி யில் உள்ள சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீசை, காஞ்சீபுரத்துடன் இணைக்காமல், சென்னையுடன் சேர்த்தால் அந்த வட்டார பொது மக்களுக்கு நன்மையாக இருக்கும். போக்குவரத்து வசதிக்கும் ஏற்றதாக இருக்கும். ஆகவே, இதைப் பரிசீலனை செய்ய அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் கோரிக்கையை அந்தத் தொகுதி எம். எல். ஏ. அவர்கள் தலையிட்டு அரசைக் கேட்டுக்கொண்டதன் மேல், உடனடியாக மாற்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுவிட்டன.

Clash between warders and prisoners.

*171 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. Minister for Law and Co-operation be pleased to state :—

(*a*) whether there was a clash between the warders and prisoners in Tiruchirappalli Central Jail on or about the 26th of February 1968 ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழுவதற்கில்லை.

குடும்பக் கட்டுப்பாடு

*172 வினா.—**திரு. டி. மார்டின் :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு மாதம் இரண்டு பேர்களைக் கொண்டு வர வேண்டும் என்று ஆணை ஏதேனும் தமிழக அரசால் பிறப்பிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடம் இல்லை.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்தில் பஞ்சாயத்து யூனியன்களில் வேலைசெய்யும் ஆசிரியர்கள், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு இவ்வளவு ஆட்களைக் கொண்டுவரவேண்டுமென்று, மாவட்ட ரீதியில் உள்ள அதிகாரிகள் உத்திரவு போட்டு, அது அரசாங்கத்தின் கவனத் திற்குக் கொண்டுவரப்பட்டதா ? அப்படியென்றால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா : அப்படி எந்த உத்தரவும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. இதுபோன்று கட்டாயமாக ஆசிரியர்கள் இரண்டு ஆட்களை குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்காக அழைத்துவர வேண்டுமென்று எவ்வித ஆணையையும் அரசு பிறப்பிக்கவில்லை.

திரு. கே. பி. எஸ். மணி : தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்ட ஆட்சியாளரும் அந்தந்த மாவட்டத்திலுள்ள பஞ்சாயத்து யூனியன் சேர்மன்கள், கமிஷனர்கள் ஆகியோர்களை விகிதாசாரப் படி இவ்வளவு பேர்களை குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்காக அழைத்து வர வேண்டுமென்று கேட்டனரா ? அவர்கள் குறிப்பிட்ட அளவைக் கொடுக்கவில்லையென்றால், ஏன் கொடுக்கப்படவில்லை, எப்போது கொடுக்கப்படும் என்று ரிமைண்டர்கள் போட்டு நிர்பந்தப்படுத்துகிறார்களா ? இதுபோன்ற நிர்பந்தங்களை நீக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படிக் கேட்பதில் தவறு இல்லை. ஆனால் நிர்ப்பந்தப்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு எதையும் போடவில்லை.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை இஸ்லாமிய மக்கள் யாரும் முன்வந்து ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே, மருத்துவத் துறை அமைச்சர் அவர்கள் தீவிர கவனம் செலுத்தினால் அம்மதத்தினருக்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும். அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி அம்மக்களிடையிலும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் அவசியத்தை வலியுறுத்திப் பரப்புவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இங்கு மத சம்பந்த மான பிரச்சினையை விவாதிப்பது சரியல்ல. எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களிலும் ஒரு திட்டத்தை சிலர் ஆதரிப்பார்கள், சிலர் எதிர்ப்பார்கள். ஆகவே, கனம் உறுப்பினர் அவர்கள் நல்லமுறையில் கவனம் செலுத்தினால் திட்டம் பயனடையும்.

*173 வினா—**திரு. வை. சுவாமிநாதன் : & திரு.** செ. **பாலசுப்பிர மணியன் :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

குடும்பக் கட்டுப்பாட்டிற்காக அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களின் குடும்பங்களுக்கு "டிரான்சிஸ்டர்" ரேடியோ பரிசளிக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, வேறு எந்த மாநிலத்திலாவது இம்மாதிரி டிரான்ஸிஸ்டர் கொடுக்கப்படுகிறதா ? இப்போது அறுவை சிகிச்சைக்காகக் கொடுக்கப்படும் தொகை அதிகரித்துக் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வேறு எந்த மாநிலத்திலாவது அறுவை சிகிச்சைக்காக டிரான்சிஸ்டர் ரேடியோ கொடுக்கப்படுகிறதா என்ற விஷயம் நம்முடைய அரசாங்கத்திற்குத்